ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

मा भीर्मन्दमनो विचिन्त्य बहुधा यामीश्चिरं यातना
नैवामी प्रभवन्ति पापजनिताः स्वामी ननु श्रीधरः ।
आलस्यं व्यपनीय भक्तिसुलभं ध्यायस्व नारायणं
लोकस्य व्यसनापनोदनकरो दासस्य किं न क्षमः ॥

मुकुन्दमालास्तवे ॥

ஏ மூடமான மனமே! இயமனால் வெகுகாலம் அடையும்படி செய்யப்படும் நரகயாதனைகளை பலவாறாகச் சிந்தித்து பயப்படவேண்டாம். அவரவர்களும் செய்யும் பாபங்களால் ஏற்படும் அந்த யாதனைகள் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. லக்ஷ்மியை மார்பில் தரிக்கும் ஸ்ரீ பகவானானவர் ஸர்வ லோகத்திற்கும் பிரபு இருக்கிறார். இயற்கையாயுள்ள சோம்பலைவிட்டு, பக்தர்களுக்கு சுலபமாய்க் கிடைக்கும் ஸ்ரீமந் நாராயணனை எப்பொழுதும் தியானம் செய். ஸகல லோகத்திற்கும் ஏற்படும் எவ்வித தாபங்களையும் போக்கும் சக்திவாய்ந்த அந்த பகவான் தாஸனுடைய கஷ்டங்களை விலக்க சக்தியற்றவராயிருப்பாரா?

ஒரு ஆஸ்திக நண்பன், தன்னால் செய்யப்பட்ட பாபகர்மாவிற்குற்ற நரக துக்கங்களை பரலோகத்தில் அனுபவிக்கவேண்டுமே என்று கவலையுறும் தன் மனதிற்கு இவ்விதம் கூறுகின்றான்.

ஹே மனமே! நீ பரலோகத்தில் நரகயாதனையை அனுபவிக்க வேண்டுமென்று பயப்படாதே. நம்முடைய ஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன் இருக்கிறார், எல்லா உலகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும் திறமை பொருந்திய அந்தப் பிரபு உன் கஷ்டத்தை நீக்க வல்லவராகமாட்டாரா? நீ மாத்திரம் சோம்பலை விட்டு, எப்பொழுதும் அந்தப் பிரபுவினுடைய சரணகமலங்களில் பக்திசெய்யவேண்டும். உன் காரியத்தைச் சரியாய் நீ நடத்துவாயாகில் பகவான் உன்னை ஒருக்காலும் கைவிடமாட்டார் என்பது திண்ணம், என்றான்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

யுக்திவாதம்.

வாதம் யுக்திவாதம், பிரமாணவாதம் என இரண்டாகவிரியும். இவ்விரண்டிற்குள் முக்கிய பிரமாணமாக எடுத்துக்கொள்ள வேண்டியது எது? என்பது வினா.

இங்ஙனம் இங்கு வினவுவோரின் கருத்து இவ்விதமிருக்கலா மென்று தோன்றுகிறது. அஃதாவது, "சந்தேகமுள்ள ஒரு விஷயத்தின் உண்மையைத் தீர்மானிக்க முன்வந்த இருவர்களில் ஒருவர் யுக்தி வாதத்தையும், மற்றொருவர் பிரமாணவாதத்தையும் கொண்டு வியவகாரம் செய்கையில் ஒன்றுக்கொன்று விரோத மாய் இரண்டுவிதமான முடிவு ஏற்பட்டால் எதை உண்மை எனக் கொள்கிறது" என்பதேயாகும்.

இவற்றுள் "ஒரு விஷயத்தை இவ்விதமென்று தீர்மானிக்க வேண்டி இருவர்களுக்கு வாதமேற்படுங்கால் அவர்களில் ஒருவர் தமது அபிப்பிராயமான ஒன்றை ஸ்தாபிக்கவேண்டி மற்றுமுள்ள பெரியோர்களின் அபிப்பிராயத்தையோ, சாஸ்திரங்களின் கருத்தையோ சற்றும் கவனியாமல், தமது புத்தியால் ஊஹிக்கப்படும் அர்த்தங்களையே சிறந்த பிரமாணமாகக் கருதித் தமது புத்திக் கெட்டியவரையில் ஆலோசித்து செய்யப்படும் வாதத்திற்கு யுக்தி வாதம்" என்பது பெயர்.

"சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விதி நிஷேதரூபங்களான வசனார்த்தங்களைக்கொண்டே ஒரு ஸந்தேகமுள்ள விஷயத்தைத் தீர்மானம் செய்யவேண்டியதற்காகச் செய்யப்படும் வாதமே"

பிரமாணவாதமாகும். பிரமாணபதத்திற்குப் பல அர்த்தங்கள் கூறப்பட்டிருப்பினும் அதற்கு இந்த இடத்தில் சாஸ்திரம் என்பதுதான் பொருள்.

இவ்விதம் தான் நடத்தவேண்டுமென்று அவசியம் தீர்மானிக்கவேண்டிய ஒரு விஷயத்தில் சாஸ்திராராய்ச்சியால் ஒருவிதமாயும், யுக்திவாதத்தால் அதற்கு விரோதமாய் வேறுவிதமாயும் ஸித்தாந்தம் ஏற்படுமாகில் எதைவிட்டு எதை எடுத்துக்கொள்கிறதென்று ஏற்படும் சங்கையைப் போக்கவேண்டி இந்த விசாரம் செய்யவேண்டியது அவசியமே. ஏதாகிலும் ஒன்றுக்குப் பிராமாண்யம் அவசியம் ஏற்படும். அதைக்கொண்டே காரியஸித்தியைச் செய்துகொள்ளலாமே? எதற்காக இந்த விசாரமென்று சங்கிக்கலாகாது. அவ்விதம் அங்கீகரித்தால் பல அநர்த்தங்கள் நேருமென்று அடியில் காண்பிக்கப்போகிறபடியால் இவ்விசாரம் அவசியம் வேண்டியதுதான். யுக்திவாதம், பிரமாணவாதம் இவ்விரண்டிற்குள் பிரமாண வாதத்தையே முக்கியமாய் எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கு விரோதமில்லாத யுக்திவாதமும் அங்கீகரிக்கக்கூடியதே. ஏன் இவ்விதம் சொல்லவேண்டுமென்றால் அறிவிக்கிறோம். யுக்திவாதத்தில் இயற்கையில் பலதோஷங்கள் ஏற்பட நியாயமுண்டு. அஃதெங்ஙனமெனில் புருஷர்களுடைய புத்தியால் கற்பிதமென்பதே முதல் தோஷமாகும். புருஷர்களுடைய புத்தி சக்தியானது ஒருமாதிரி பரிமாணத்திற்குள் அகப்பட்டபடியால், அது விஷயங்களிலுள்ள குணங்களையோ தோஷங்களையோ பூராவையும் உண்மையாக அறியும் திறமையற்றது. புத்தி சக்தியானது பரிமாணத்திற்குள்ளடங்கியது என்று எங்ஙனம் கூறலாமென்று சொல்வதும் சரியல்ல. எந்த புத்தியை நாம் எடுத்துக்கொண்டாலும் அதன் சக்தி ஒருவிதமான பரிமாணத்திற்குள் அடங்கித்தான் இருக்கும். ஆனால் பல புத்திகளைக் கவனித்தால் "இதைக்காட்டிலும் அதுமேல்; அதைக்காட்டிலும் இதுமேல்" என்று அவைகளுக்குள் அதிகம் குறைவு என்கிற வேற்றுமை ஏற்படுமேயன்றி எவ்வளவு சிறந்த புத்தியாயிருந்தாலும் அதன் சக்தியும் ஓர் அளவில் அடங்கியதாகத்தானிருக்கும். இதைத் திருஷ்டாந்தவாயிலாகவும் அடியில் வருமாறு காண்க.

உலகில் ஐசுவரியவான்கள் பலரிருப்பினும் ஒவ்வொருவருடைய ஐசுவரியமும் பரிமாணத்திற்குள் அடங்கியதேயாகும். ஆனால் அதற்குள் அதிகம், குறைவு என்கிற பேதமுண்டு. ஒரு லக்ஷம் பொருள் உடையவனைக்காட்டிலும் இரண்டு லக்ஷமுடையவன் மேல். அவனைக்காட்டிலும் மூன்று லக்ஷம் உடையவன், அவனைக்காட்டிலும் நான்கு, ஐந்து லக்ஷங்களையுடையவர் என்று முறையே உயர்த்திக்கொண்டுபோய் எல்லோரைக்காட்டிலும் ஒருவரை எடுத்துக்கொள்வோம்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.

'प्रवत्स्यमानं सस्यं हि ज्ञायेताङ्कुरसंस्थितौ ॥'

முற்காலத்திய த்ரைவர்ணிக மாணக்கர்கள் கெர்ப்பமுதற்கொண்டு எட்டாவது வயதிலோ பிறப்புமுதற்கொண்டு எட்டாவது பிராயத்திலோ உபநயனம் என்ற வேதாத்யயனத்திற்குற்ற ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு, குறைந்தபக்ஷம் பனிரண்டு வருஷம் வரையாவது குருகுல வாஸஞ்செய்து, தத்தம் புத்திப்போக்குக்குத் தகுந்த வித்யைகளைக்கற்று, அவற்றையே பிறருக்கும் போதித்து, நன்கு வெகுமதிபெற்று, தம் குலத்திற்குற்ற குடும்பங்களினின்றும் சுசீலையான கன்னியை மணம்புரிந்து, கிரஹஸ்தாச்ரமத்தில் ஸதிபதிகள் இணக்கமாய் இயன்ற தர்மங்கள்புரிந்து இம்மை மறுமைப் பயனைப் பெற்றுவந்தனர்.

தற்காலத்திய வித்யார்த்திகளோ—ஐந்து வயதிலேயே ஆங்கிலக் கல்லூரிகளிற்சென்று, ஆங்கில மாத்ருகாக்ஷரங்களை ஆதரவுடன் அறிந்துகொண்டு அயல்நாட்டாரின் நடையுடை பாவனைகளிலே கண்ணும்கருத்துமாயிருக்கும்படி பழக்கம்பெற்று, பின்னர் ஏதாவதொரு பிழைக்கும்வழி கிடைத்தால், அஃது தமது குடும்பச் செலவுக்குப் போதாது, தாய்தந்தையரின் இனுக்தொகையை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கின்றனர். ப்ராசீனகாலத்து

வித்யார்த்திகள் எப்பொழுதும் பெரியோர்களின் ஸஹவாஸத்தால் நற்போதனைபெற்று மஹா தேஜஸ்விகளாய்

‘अग्निर्माणवकः’ ‘सिंहो माणवकः’

(அக்னிபோல் இருக்கிறான். ஸிம்மம்போல் இருக்கிறான்.) என்று போற்றும்படி விளங்கினர்.

இக்காலத்துப் பள்ளிப்பிள்ளைகளோ ரிஷிகளின் பரம்பரையாக வந்துகொண்டிருக்கும் அல்பம் ஸ்வல்பம் அந்தணரின் முகக்குறியையும் அடியோடு இழந்து, அனுசாரபூயிஷ்டர்களாகிக் கஷ்டப்படுகின்றனர்.

இப்பேற்பட்ட இழிவான நிலைமையைப் பிரத்யக்ஷமாகக் கண்ணுற்ற, மஹா மஹிமைபெற்ற ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக விளங்கும் பரமாசார்யர்கள் ஆங்காங்கு விஜயம்செய்து எல்லா வித்யார்த்திகளுக்கும் ஹிதோபதேசங்கள் செய்து, சிற்சில கிராமங்களில் சிறுசிறு பாடசாலைகளை ஸ்தாபித்து, நற்போதனை செய்வித்து, பின்னர் கடைத்தேரும்படி செய்துவருகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே; கருணாஸாகரராகிய ப்ரத்யக்ஷ குருமூர்த்தியாகிய முற்கூறிய ஆசார்யர்களைப் பின்பற்றி ஏனைய ஏனைய ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகளும் அவ்வண்ணமே செய்துவருகின்றனர் என்பது நம்மிந்திய மஹாஜனங்களின் க்ஷேமகாலத்தையே ஸூசிப்பிக்கின்றது. வேதாத்யயனம், ஸம்ஸ்கிருதபாஷா பரிசயம் இவ்விரண்டும் எந்த மாணுக்கனுக்கு இளைமைப்பருவத்திலேயே உபாத்யாயர்கள்மூலம் கிடைத்துவிட்டதோ, அவன் ஒருபொழுதும், கெட்டவழியில் திரும்பி கெடுதியுறான்; மற்றவனோ திக்கற்றவனாகி குற்றவாளியாகி பரிதவிப்பான். ஆதலால் நாமெல்லோரும் நம் ஸந்ததிகளை நல்வழியில் பயிற்சிபெறும்படி முயற்சிசெய்யக் கடவோம். நல்ல மாணுக்கரைப்பற்றியே தலையங்கத்தில் குறிப்பிட்ட பழமொழி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகலின் நாம் நற்பயிர் விளைவிக்க கருணையின்கடலாகிய கடவுளை அநுதினம் போற்றுவோம்.

கே. ஏ. இராமலிங்கசாஸ்திரீ,
‘ஸம்ஸ்கிருத காமதேனு’ பத்திராதிபர்,
கல்விடைக்குறிச்சி.

வேதமும் அதன் பிரிவுகளும்.

पञ्चाशद्वर्णरूपेण यया व्याप्तमिदं जगत् ।
शब्दब्रह्ममयीं वाणीं भजे तां परदेवताम् ॥

ஆரியர்களால் பல கோடிகாலமாய்க் கொண்டாடப்பட்டு வரும் பிரமாண நூல் வேதமே; உலகத்தில் வழங்கப்படும் ஒவ்வொரு ஆரியதர்மத்திற்கும் ரக்ஷகமாயுள்ளது. ஆதலால் ஆரிய மதம் கெடாமலிருக்கவேண்டுமாயின் அதன் பிரமாண நூலாகிய வேதம் கெடாமலிருக்கவேண்டியதவச்யமாகும். அதைப்பற்றி மாறுபாடாய் அபிப்பிராயப்பட்டால் அது நமது மதத்திற்குக் குறைவையே உண்டுபண்ணும். ஆதலால் அப்படிப்பட்ட தாறுமாறுகிய அபிப்பிராயத்தை மறுப்பதின் காரணமாக அதன் உண்மையாகிய பெருமையைச் சற்று கூறுவோம். ஸ்மிருதி ஸூத்திரம் புராணம் முதலிய சகல கிரந்தங்களுக்கும் ஆதிநூல் வேதமே. அது மந்திரராசி பிராம்மணராசி என இருவகைப்படும். மந்திரராசிகளை ஒரேவகை என்னலாம். பிராம்மணராசியானது, விதி, நிஷேதம், அர்த்தவாதம். (विधि निषेध अर्थवाद) என்று மூன்று வகைப்படும். விதியாவது, இதனைச் செய்யவேண்டுமென்று விதிப்பதாம். நிஷேதமாவது, இதனைச்செய்யாதே என்று விலக்குவதாம். அர்த்தவாதமாவது, விதியையோ நிஷேதத்தையோ விசதமாக எடுத்து சாமானிய ஜனங்களுக்கு போதிப்பதின்பொருட்டு திருஷ்டாந்தமாகிய கதையைப்போல் எழுதிய வாக்கியங்களாகும்.

अग्निहोत्रं जुहुयात्स्वर्गकामः, न कलञ्जं भक्षयेत्, वायुर्वै क्षेपिष्ठा देवताः ॥

என்பவைகளை, விதி, நிஷேத, அர்த்தவாதங்களுக்கு உதாஹரணமாகக் கொள்ளலாம். துஷ்டர்களுக்கு உதவிசெய்தல் கூடாது என்கிற விஷயத்தைப் பாலருக்கும் போதிப்பதின் பொருட்டு பெரியோர்கள் சிறு கதைபைச் சொல்லித் திருத்துவதுபோல கன்மத்தையே பிரதானமாகக்கொள்ளும் சாமானிய ஜனங்களை

நோக்கி அக்கர்மத்தை இவ்வாறு செய்யவேண்டும், வேறுவிதமாகச் செய்யக்கூடாதென்று அர்த்தவாத வாக்கியங்கள் போதிக்கின்றன. அர்த்தவாத சரித்திரங்கள் உண்மையாய் நடந்ததல்ல. பிரகிருதத்திலுள்ள விஷயத்தைப் போதிப்பதின் பொருட்டே அவை முக்கியமான கருத்துள்ளவைகளாகும்.

துஷ்டர்களுக்கு உபகாரம்செய்யக்கூடாதென்பது உசிதமே. அதற்காகக் கூறப்படும் கதையிருப்பினும், சிறுவருக்கு எப்படி விஷயத்தை திருஷ்டாந்தமாக விளைவிக்கின்றதோ அப்படியே அர்த்தவாதத்திலும் வாயு சீக்கிரமான கதியையுடையவர் என்பது முதலிய குணங்களைத் தெரிவித்து நமக்கு சீக்கிரமாகப் பலத்தைக் கொடுப்பவராகையால் அந்தக் கர்மாவை அவச்யம் செய்யவேண்டும் என்று நமக்குப் பிரவிர்த்தியை உண்டுபண்ணுகிறது. அல்லாது வேதங்களில் சொல்லப்பட்ட கதைகளெல்லாம் உண்மை என்று கொண்டால், அக்கதைகளுக்குப் பிறகே வேதமேற்பட்டிருக்கிறதாகச் சொல்லநேரிடும். அவ்விதம்கொண்டால் வேதம் அனாதியென்பது கெட்டுவிடும். வேதம் அனாதி என்பதே தோஷமற்ற பிரமாணம். இதனால் வேதத்திலுள்ள கதைகள் உண்மையல்லவென்பதும், அவைகளின் கருத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்பதுமே உண்மையாதலால் அங்ஙனம் அறிந்தவர்களுக்கு வேதத்தில் சிறிதுகூட ஆசங்கை ஏற்படாது. ஆனால் சில சரித்திரங்கள் உண்மையென்றே வேதசாகோப நிடதங்களில் காணப்படுகின்றனவே. அதாவது, கேநோப நிடதத்தில் உமாதேவிக்கும் பரமசிவனுக்கும், கடவல்லியில் யமனுக்கும் நசிகேதஸுக்கும், சாந்தோக்யத்தில் உத்தாலருக்கும் சுவேதகேதுவுக்கும் ஆத்மவித்யோபதேசம் செய்யப்பட்டதாக சரித்திரங்கள் காணப்படுகின்றனவே. இதையும் அர்த்தவாதமென்பது உசிதமன்றே. இச்சரித்திரங்களில் பிதற்றல் யாவுமில்லையே. ஆதலால் இதை உண்மையென்றே கூறவேண்டும். இதிஹாஸ புராணங்களிலும் இச்சரித்திரங்களும் நடந்த விஷயமென்றே சொல்லப்பட்டிருக்கின்றன. இச்சரித்திரங்கள் நடந்தேறிய பிறகே வேதமேற்பட்டிருக்கிறதென்பது உசிதமாயிருக்க, வேதம் அனாதி நூலென்பதும் எவ்வாறு ஒவ்வுமென்றால், கூறுவோம். அதாவது, கேநோப

நிடதம் முதலியவைகளில் முற்கூறிய சரித்திரங்கள் கூறியதுண்மையே. ஆனால், அவைகள் நடந்த பிறகு வேதமுண்டானது என்பது மாத்திரம் உண்மையறியாமல் பிதற்றினதாகும். உமா தேவி பரமசிவனுக்கும், யமன் நசிகேதஸுக்கும் உத்தாலகன் சுவேதகேதுவுக்கும் வித்யோபதேசம் செய்ததாக உபநிஷத்துக்களில் கூறப்பட்ட சரித்திரங்களே இதிஹாஸ புராணங்களிலும் சொல்லப்பட்டிருப்பதால் அவைகள் வாஸ்தவமாக நடந்தன என்பதும் ஸித்தாந்தமாகாது. ஆத்மவித்தையை குரு உபதேச மூலமாகவே பெறவேண்டும். தன் புத்தியினால் கிரஹித்துக் கொள்ளமுடியாதென்கிற உண்மையை உலகத்தாருக்கு போதிப்பதற்காகவே, குரு சிஷ்ய ஸம்பிரதாயத்தைக்காட்டி சிரவணஞ் செய்வோருக்குப் புத்தியில் நன்றாய்ப் படுவதின்பொருட்டு மாத்திரம் உண்மைபோன்ற கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதுவேயன்றி, அக்கதைகள் வாஸ்தவமாகவே நடந்தவைஎன்று கொள்ளவேண்டிய தவச்யமில்லை.

ஞானவித்யையை அறிவிக்கத் தலைப்பட்ட மற்ற இதிஹாஸ புராணங்களிலும் மற்றும் சிற்சிலசரிதங்கள் இவ்வாறு குரு சிஷ்ய ஸம்பிரதாயத்தினைத் திருஷ்டாந்த மூலமாகப் போதிப்பதின் பொருட்டாகவே இறைவனால் கற்பனையாய்ச் சொல்லப்பட்டன வென்பதே மர்மமாகும். சிரவணஞ்செய்வோருக்கு உசிதமாகிய திருஷ்டாந்தங்களைக்கொண்டு விஷயத்தைப் போதித்தால் மனதில் தெளிவாய் பதியுமென்பதைக் கருதியே அவ்வாறு உபநிஷத்துக்கள் வரையப்பட்டிருக்கின்றனவென்பதே நமது பரமாசாரியசவர்களால் செய்யப்பட்ட நிர்ணயம். இவ்விதமுள்ள நிர்ணயத்தையறியாமல் சரித்திரங்களை வாஸ்தவமென்றுகொண்டு அவைகளின் காலத்திற்கு பிறகே வேதங்களேற்பட்டன என்பது அறியாத்தன்மையையே போதிக்கும்.

[तत्राख्यायिका विद्या स्तुत्यर्था] कठवल्ल्यां तत्राख्यायिका गुरूपदेशादेर्ब्रह्मविद्याङ्गत्वं दर्शयितुं विद्यां स्तोतुं च तैत्तिरीये च ॥

இங்கு சரிதமானது குரு உபதேசம் முதலியது பிரம்மவித்யைக்கு அங்கம் என்பதைப் போதிப்பதின் பொருட்டும், பிரம்மவித்

யைச் சிறப்பிப்பதின் பொருட்டுமே இவை இவ்வாறு கூறியிருக்கின்றன. இதனால் வேதம் அநாதி என்பதில் சந்தேகமேற்படாது.

युगान्तान्तर्हितान्वेदान् सेतिहासान्महर्षयः ।
लेभिरे तपसा पूर्वमनुज्ञातास्स्वयंभुवा ॥

மகரிஷிகள் பூர்வம் யுகாந்திரத்தில் ஸூக்ஷ்மமாய்ப் பதிந்திருந்த வேதங்களை பிரம்மாவின் அநுக்கிரஹத்தினால் தபஸினால் கண்டு பிடித்தார்கள் என்று வேதவியாஸரினால் கூறப்படுகிறது.

ब्रह्माणं मुनयः पूर्वं सृष्ट्वा तस्मै महेश्वरः ।
दत्तवान्सकलान्वेदान् स्वात्मन्येव स्थितानिमान् ॥
श्रुतिस्सनातनी शंभोरभिव्यक्ता न संशयः ।
शङ्करेण प्रणीतेति प्रवदन्त्यपरे जनाः ॥
वेदोऽनादिश्शिवस्तस्य व्यञ्जकः परमार्थतः ।
अभिव्यक्तिमपेक्ष्यैव प्रणीतेत्युच्यते शिवः ॥

ஓ முனிவர்காள்! பிரம்மனை முதலில் உண்டாக்கி அவனுக்கு மஹேச்வரன் தன்னிடமேயுள்ள வேதங்களெல்லாவற்றையும் உபதேசிக்கின்றார். வேதம் எப்போதுமுள்ளது. அது சம்புவினிடத்தில் முதலில் அபிவ்யக்தமடைந்தது. இதில் ஸம்சயமில்லை. சங்கரன் வேதத்தை இயற்றியவர் என்று சிலர் கூறுகின்றனர். வேதம் அநாதியே, அதனை இயற்றுவோர் யாருமில்லை. சிவன் அதை அபிவ்யக்தமாகச் செய்தாரென்பதும் உண்மையே, பூர்வ காலத்தில் தன்னால் சொல்லப்பட்ட வாக்யங்களின் முன் பின் முறைமாறாமல் அந்த முறையையே யுடையதாகிய வேதராசியையும், அதன் பொருள்களையும் ஸமகாலத்தில் அறிகின்றவனாய்க் கொண்டு வேதத்தைச் சொன்னார். ஆதலால் வேதம் பௌருஷேயமல்ல.

அத்தகைய வேதம் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் அதர்வணவேதம் என்பதாக நான்கு பிரிவடையும். ஒவ்வொரு வேதமும் பல சாகைகளையுடையன. அதில் ருக்வேதமாவது, பாதபந்தத்தோடுகூடின பதிகம் போன்றதுள்ள வேதவாக்கியங்

களாம். அவ்வேதம் எட்டு அஷ்டகங்களாகவும், பத்து மண்டலங்களாகவும், அறுபத்துநான்கு அத்தியாயங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அச்சாகைகளில் ஐதரேயம், கௌஷீதகம், ஸாங்கியாயனம், ஆச்வலாயனம், மாண்டுக்யம் முதலியன காணப்படுகின்றன.

யஜுர்வேதம், இது கிருஷ்ணயஜுஸ், சுக்லயஜுஸ் என்று இருவகையாக நடைபெற்றுவருகிறது. இவ்வேதத்தின் சாகைகளின் பெயர்கள் முற்றும் தற்காலம் அறியப்படாவிடினும், கிருஷ்ண யஜுஸின் பெயர்களில் அறியப்படுவனவாகிய சில பெயர்களை இங்கு கூறுவாம். அதாவது, சரகம், ஆஹ்வரகம், வாரவந்தீயம், சுவேதம் முதலியவைகள். சுக்லயஜுர் வேதத்தில் பதினைந்து சாகைகள் உள்ளன. அதாவது, காண்வம், மாத்தியந்தினம், ஜாபாலம், பௌருதேயம், சாகேயம், தாபநீயம், காபோலம், பௌண்டரவத்ஸம், ஆவடிகம், பரமாவடிகம், பாராசாரீயம், வைநீயம், பைதேயம், ஔதேயம், காலவம், என்பனவாம்.

ஸாமவேதம், இது கீதம்போன்ற ஸ்துதியுள்ளது. ப்ரகிருதி, ஊஹம், ரஹஸ்யம் என்று மூன்று வகையாக கானங்களைப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வேதத்திற்கு ஆயிரம் சாகைகளுண்டு. ஆயினும் பல சாகைகளின் பெயர்கள் தற்காலம் விபக்தமாய்க் காணப்படவில்லை. தற்காலம் அறியப்படும் சாகைகளாவன, ராணாயனீயம், சாம்யமூகம், காபோலம், ஆஸுராயணம், வாதாயனம், வைநத்ருதம், நைகேயம் முதலிய சிற்சில சாகைகளே பெயரினால் அறியப்படுகின்றன.

அதர்வணவேதமாவது, சாந்திப்பிரதிஷ்டைமுதலிய கிரியைகளுக்கும் மாரண, உச்சாடன, ஸ்தம்பன, மோஹன, ஆபிசாரிக முதலிய கிரியைகளுக்கும், அக்கினி அஸ்திரம் வாயவ்யாஸ்திரம் முதலிய அஸ்திரங்களின் பிரயோகத்திற்கும் வேண்டிய மந்திர விசேஷமுடையதாயும், மற்றுமுள்ள ஸௌம்மிய மந்திரங்களும், பிரமாணங்களும் அடங்கியதாகிய வேதமாம். இவ்வேதத்திற்கு ஒன்பது சாகை. அவையாவன, பாலாதம், சௌநகீயம், தாமோதம், தோதாயனம், ஜாயலம், பிரும்மபாலாசம், குநகீ, தேவதாசீ, சாரணவித்யம் என்பவைகளாம்,

ஆனால் தற்காலம், இவ்வேதமந்திர பிரயோகமுறை அழிந்த தற்குக் காரணம், ஸத்காரியங்களுக்கு விரோதம் செய்பவர்களை நிக்ரஹித்து, தர்மஸ்தாபனத்தின் பொருட்டுள்ள ஷை மந்திர விதிகளை இப்போது பாபமே மிகுதிப்பட்டிருக்கின்றமையால், இவர்கள் பரிகாரத்திற்குத்தக்கபடி அஸத்காரியங்களை ஸ்தாபிக்கும் விஷயத்திலேயே உபயோகிப்பார்கள் என்பது தீர்க்கதரிசிகளாகிய முன்னோர்களால் அறியப்பட்டுப்போனமையால் அவ் வேதத்தை மாத்திரம் ஒழிந்துபோகும்படி செய்தார்கள் என்பதே. இவ்வாறு வேதத்தைப் பற்றிய சில விஷயங்கள் நிரூபிக்கப்பட்டன. இவ்வாறு மேற்கூறிய நான்கு வேதங்களையும் முறையாக த்விஜர்கள் அத்தியயனம் செய்யவேண்டும். மற்றவர்களுக்கு வேதாத்யயனத்தில் அதிகாரமில்லை என்பதை ஸப்பிரமாணமாக நமது ஆர்யதர்மமே நமக்கு நெடுநாளாக போதித்திருக்கிறது. ஆகையால் அவ்விஷயத்தைப்பற்றி இவ்விடம் விசாரிக்கத்தேவையில்லை. த்விஜர்கள் அத்யயனம்செய்து அந்த விசாரத்தினால் ஸத்கர்மாவில் பிரவிருத்தி ஏற்பட்டு அதனால் மோக்ஷமடையலாம். ஷை வேதார்த்தங்கள் கேவல வ்யுத்பத்தியினால் மாத்திரம் அறிய இயலாததலால் அதன் பொருளை கற்பதற்குவேண்டிய ஸாதனங்களைப்பயிலவேண்டும். அவைகளே அங்கங்கள் என்பனவாம். அவை, சீக்ஷை, வியாகரணம், நிருக்தம், ஜோதிஷம், கல்பம் என ஆறுவகைகளாம். இவைகளுள் சீக்ஷை என்பது அக்ஷரம், ஸ்வரம், மாத்திரை, பலம், ஸாமம், ஸந்தானம் இவைகளைக்குறிக்கும் நூலாகும். அக்ஷரமாவது—அகாரம் முதலிய வர்ணங்கள். ஸ்வரம் உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் மாத்திரையாவது—ஹ்ருஸ்வம் தீர்கம் முதலியன. பலமாவது—அக்ஷரோச்சாரணங்களுக்கு வேண்டிய ஸ்தானங்கள். ஸாமம், ஸௌம்யம் தோஷமற்றது. தோஷங்களாவன,

गीती शीघ्री शिरःकम्पी तथा लिखितपाठकः ।
अनर्थज्ञोऽल्पकण्ठश्च षडेते पाठकाधमाः ॥

இவைகளற்றது ஸந்தானம். **वायो आयाहि ॥ वाय वायाहि** என்றும் ஸந்தி அவாந்தேசம். இங்ஙனம் சீக்ஷை முடிந்தது.

வியாகரணம், இது சப்த சாஸ்திரலக்ஷண நூலாகும். இது ஒன்பது வகைப்படும். ஐந்திரம், சாந்திரம், காசகிருத்ஸனம், கௌமாரம், சாகடாயனம், ஸாரஸ்வதம், ஆபிசலம், சாகலீம், பாணிநீயம் என்று ஒன்பது வகைப்படும். இதில் பாணிநீயவ்யாகரணம்மட்டும் ஓங்கிவளர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. மற்ற வ்யாகரணங்கள் இருந்தபோதிலும் ஒரு சப்தத்திற்கு வ்யாகரண பேதமாக ஸாதுஅஸாதுவாக ஆய்விடுகிறதாம். பாணிநீய வ்யாகரணத்தில் லௌகிகாலௌகிக சப்தங்கள் விசாரிக்கப்படுகின்றன. ஆகையால் இதுவே மேன்மையாகும்.

पाणिनीयं महाशास्त्रं पदसाधुत्वलक्षणम् ।
सर्वोपकारकं ग्राह्यं कृत्स्नं त्याज्यं न किंचन ॥

पराशरोपपुराणे ॥

பாணிநீய சாஸ்திரம் அவச்யம் அத்யயனம் செய்யவேண்டும். ஷெ வ்யாகரணம் அத்யயனம் செய்தால், இது ஸாது, இது அஸாது என்பவை நன்கு புலப்படும். இல்லாவிட்டால் அஸாது சப்தங்களைச் சொன்னால் தோஷமேற்படுகிறது. வேதம் அஸாதுவான சப்தங்களை உச்சரிக்கக்கூடாதென்று தெரிவிக்கின்றது.

(साधूनेव प्रयुञ्जीत नत्वपभ्रंशान्) तस्माद्ब्राह्मणेन न म्लेच्छितवै ।

என்று முறையிடுகிறது. ஆகையால் ஸாதுவான சப்தங்களை உச்சரிக்கவேண்டும். ஸாது சப்தமறிவதற்குப் பாணிநீய வ்யாகரணம் அவச்யம். ஸாது சப்தத்தை உச்சரித்தால் ஒரு சப்தத்தை ஸ்வரபுரஸ்ஸரமாக அப்யாஸம் செய்து உபயோகிப்பானாகில் அவனுக்கு ஸ்வர்கம் கிடைக்கிறதென்று கூறுகிறது.

एकः शब्दः सम्यक् ज्ञातः सुष्ठु प्रयुक्तः स्वर्गे लोके कामधुग्भवति ॥

என்பதாக வேதங்களில் அநேகம் பலன்களுடன் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் அப்படிப்பட்ட ஸ-சப்தத்தை போதிக்கக்கூடிய பிரமாணநூல் வ்யாகரணம். சந்தஸ்:—இது எழுத்துக்களைக் கணக்கிடும் மந்திரங்களின் இயல்பை போதிக்கும் நூலாகும். காயத்திரீ, ஜகதீ, அனுஷ்டுப் முதலிய சந்தஸ்களின் பாதங்களை நிர்ணயிக்கும் நூல். இதை பிங்களர் முதலிய மகரிஷிகள் இயற்றியவர்கள். நிருக்தம்:—இது வேதத்தில் கூறியிருக்கும் கடினமான

பதங்களின் அர்த்தத்தை விளக்கும் நூலாகும். இது யாஸ்கர் என்னும் முனிவரால் அருள்செய்யப்பட்டது. இது வேதத்திற்குச் சிறிய உரைபோலாகும். ஜோதிஷம்:—வேதத்தில் காலவிசேஷத்தைக்குறித்தே கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றபடியால் வேத விஹித கன்மங்களை அனுஷ்டிப்பதற்குரிய காலவிசேஷமாகிற திதி, வார, நக்ஷத்ரங்களின் உண்மையை ஸந்தேகமன்றி அறிந்து கொள்வதின்பொருட்டு கற்றறிந்துகொள்ளவேண்டிய நூலாகும்.

கல்பம்:—ஆச்வலாயனர், ஆபஸ்தம்பர், போதாயனர், முதலிய மகாமுனிவர்களால் வேத விஹிதமான கர்மாக்களை அநுஷ்டிப்பதின் முறையையும் எந்தெந்த மந்திரங்களை எந்தெந்த கர்மாக்களில் உபயோகிக்க வேண்டுமென்கிற விநியோகங்களையும் எடுத்துச் சுருக்கமாகச் சொல்லப்படும் நூலாகும். அதுவும் சிரௌதஸூத்திரம், ஸ்மார்தஸூத்திரம், என இருவகைப்படும். சிரௌதஸூத்திரமாவது யாகாதி கர்மாக்களின் முறையை உணர்த்தும் ஸூத்திராசியாகும். ஸ்மார்தமாவது ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட ஸந்தியாவந்தன ஔபாஸந வைச்வதேவாதி ஸகல கர்மாக்களையும் அநுஷ்டிப்பதின் க்ரமத்தைப்போதிக்கும் நூல். இந்நூலே கிருஹ்யஸூத்திரங்கள் எனப்படும். மனிதனுக்குக் கை கால் முதலியதுபோல் வேதத்திற்கும் இவ்வாறும் அங்கங்களாகும்.

छन्दः पादौ तु वेदस्य हस्तौ कल्पोऽथ पठ्यते ।
ज्योतिषामयनं चक्षुर्निरुक्तं श्रोत्रमुच्यते ॥
शीक्षा घ्राणं तु वेदस्य मुखं व्याकरणं स्मृतम् ।
तस्मात्साङ्गमधीत्यैव ब्रह्मलोके महीयते ॥

கை, கால்: கண், முகம், முதலிய அவயவங்களன்றி ஜீவாத்மாவோடு எங்ஙனம் வ்யவஹரிக்கமுடியாதோ, அங்ஙனம் சீக்ஷா வ்யாகரணம் முதலிய 'அங்கநூல்களன்றி வேதத்திலுள்ள விஷயத்தைச் சிறிதும் அறிந்துகொள்ள இயலாது. பின்னும் மிகவும் அவச்யமாய்க் கற்றறிந்துகொள்ள வேண்டியவைகளாகிய மற்றும் சில நூல்கள் இருக்கின்றன. அவையாவன,

मन्वत्रिविष्णुहारीतयाज्ञवल्क्योशनोऽङ्गिराः ।
यमापस्तम्बसंवर्ताः कात्यायनबृहस्पती ॥

पराशरव्यासशंखलिखितावक्षगौतमी ।
शातातपो वसिष्ठश्च धर्मशास्त्रप्रयोजकाः ॥

மனு ப்ருஹஸ்பதீ, தக்ஷர், களதமர், யமர், அங்கிரர், யாக்ஞவல்க்யர், பிரசேதஸ், சதாதபர், பாராசரர், ஸம்வர்தர், சங்கர், லிகிதர், அத்திரி, விஷ்ணு, ஹாரீதர், உசநஸ், ஆபஸ்தம்பர், என்றும் பதினெட்டு ஸ்மிருதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. இவையன்றியும் உபஸ்மிருதியென ஜாபாலி நாசிகேதஸ் ஸ்கந்தர், லோகாக்ஷி, கச்யபர், வ்யாஸர், ஸநத்குமாரர், சந்தனு, ஜனகர், வ்யாக்கிரர், காத்தியாயனர், ஜாதுகர்ணர் முதலியவர்கள் சிலநூல்களை இயற்றியிருக்கிறார்கள். ஸூத்திரங்களையும் போதாயநாபஸ்தம்பர் திராஹ்யாயணர் முதலியவர்கள் இயற்றியிருக்கிறார்கள். அவ்விதமே பிரும்மபாத்மம் வைஷ்ணவம்,சைவம்,பாகவதம் நாரதீயம் பவிஷ்யத்,மார்க்கண்டேயம், ஆக்னேயம், லைங்கியம், வாராஹம்,ஸ்காந்தம், வாமனம், மாத்ஸ்யம், கூர்மம், காருடம், பிரும்மாண்டமெனப் புராணங்களும் 18 இருக்கின்றன. இதிலும் உபபுராணங்கள் இருக்கின்றன. இங்ஙனம், வேதமும் வேதத்தின் அங்கங்களும் நிரூபிக்கப்பட்டன. இவைகளை நாம் முறைதவறாமல் ஆசார்யர் ஸமீபமடைந்து வேதாப்யாஸம்செய்து அர்த்தவிசாரம்செய்து அதனால் சித்தசுத்திஏற்பட்டு மோக்ஷமடையவேண்டும். மோக்ஷமடைவதற்கு ஒரு ஜன்மாவில் தகுதியான பகுத்தறிவுவாய்ந்த நாம் வேதாப்யாஸம் செய்யாவிடில் எவ்விதம் மேல்பதவியை அடையமுடியும். ஆகையால் நாம் ஒரு வழியை அடைய முயல வேண்டியதவச்யம் இஜ்ஜன்மம் ரொம்பவும் மேலானதென்பதை பரமாசாரியரும்.

जन्तूनां नरजन्मदुर्लभमतः पुंस्त्वं ततो विप्रता ।

என்று கூறியுள்ளார். ஆகையால் நாம் ஒவ்வொருதினமும் காலையில் ஸ்நாநம் ஸந்தியாவந்தனம் ஸூர்ய நமஸ்காரம் முதலிய ஸத்கர்மாக்களைத்தவறாமல் செய்துகொண்டு ஸத்குருவைநாடி வேதம் வேதாந்தம் முதலிய அத்யாத்ம சாஸ்திரங்களைப் பயிற்சிசெய்து விஹிதமான கர்மாக்களை விடாதனுஷ்டித்து அதனால் சித்தசுத்தியடைந்து ஸத்குருவின் ப்ரஸாதத்தினாலும், ஸ்ரீ பார்வதீ நாதனுடைய அனுக்ரஹத்தினாலும் நிரதிசயஸுகானுபவமான மோக்ஷமடைந்து எல்லாரும் கிருதார்தர்களாக ஆகவேண்டுமென்பது இதன் கருத்தாகும். சுபம். K. R. வைத்தியநாதசாஸ்திரிகள்,

மதிப்புரை.

நவக்கிரஹாராதனக்கிரமம்.

ஆர்யமத ஸம்வர்த்தினீ பத்திராதிபரான ஸ்ரீ க. நடேச சாஸ்திரிகள் அவர்களால் நம் பார்வைக்கி அனுப்பப்பட்ட இப் புத்தகத்தை வரப்பெற்ருேம். உலகில் மானிடராய்ப் பிறந்த எவரும் தம் பிறப்பு முதல் இறப்பு வரை முறையே ஏதாவதொரு கிரகத்தாலோ அல்லது பல கிரகங்களாலோ அவ்வக்காலங்களிலளிக்கப்படும் சுபாசுபபலங்களை அனுபவித்தே தீர வேண்டும். அவ்விதம் அனுபவிக்கப்படும் பலன்கள் சுபபலங்களாகவே இருக்கவேண்டுமென்று நம்போன்றவர்களுக்கு மிக்க அவா விரும்பினும் நம் நோக்கத்தை அற்பமேனும் கருதாமல் முற்பிறவியிற்செய்த தீவினையால் அடிக்கடி கிருகங்களின் பீடையால் பல துன்பங்களை அனுபவித்து வருகிருேமென்பதும் யாவருமறிந்த விஷயமே. இவ்விதக் கஷ்டங்களை நாம் அதிகம் அனுபவிக்க வேண்டாமென்று கருணாநிதிகளான நம்முன்னோர்கள் பாபகிருகங்கள் விபரீத பலத்தைக் கொடுக்காமல் அனுக்கிரகிக்கவேண்டி அவைகளின் ஆராதனக்கிரமங்களை நன்கு வெளியிட்டிருந்தாலும், காலதோஷத்தாலும் வைதிககர்மாக்களில் ஜனங்களுக்கு சிரத்தை குன்றியதாலும், அவைகள் நன்கு பிரஸித்தியாகவில்லை. துஷ்ட கிரகத்தால் பீடிக்கப்பட்ட சிலர் கஷ்டம் ஸகியாமல் தங்கள் குருவைக்கொண்டு பரிகாரமான வைதிககர்மாவைச் செய்யும்படி சொன்னுலும் அவர்களும் தமக்குத் தோன்றியவாறு எதையாகிலும் செய்துவிட்டு தக்ஷிணையைப் பெற்றுக்கொண்டு ஓடுகிருர்களேயல்லாமல் முறைப்படி அனுஷ்டிக்க அவர்களுக்கும் தெரிகிறதில்லை. இவ்விதம் நடக்கும் விபரீத அனுஷ்டானங்களையும், ஜனங்கள்படும் கஷ்டங்களையும் கண்ணுற்ற நம் நடேசசாஸ்திரியவர்கள் **सर्वे जना: सुखिनो भवन्तु** எல்லாஜனங்களுக்கும் ஸௌக்கியமாய் வாழவேண்டுமெனச் சான்ருேர் சாற்றிற்கிணங்க நம்மாலியன்றவரையில் உலகிற்கு நன்மைபுரிய வேண்டுமெனக்கருதி இச் சிறந்த புஸ்தகத்தை நன்கு விஸ்தாரமாய் எழுதி வெளியிட்டிருக்கிருர்கள். இப்புத்தகத்தில் ஒவ்வொருகிரகத்தைப்பற்றியும் அதின்

மந்திரம் கவசம் ஸ்தோத்திரம் அற்சிப்பதற்காக அஷ்டோத்தரசத (108) நாமாவளி ஆதித்தியஹிருதயம் முதலான பல விஷயங்களும் ஆராதிக்கவேண்டியமுறைகளும் சில மந்திரங்களுக்குப் பொருளும் நவக்கிரகஹோமம் செய்யும்முறையும் கலசஸ்தாபன விதியும் நவக்கிரகபிரதிமைகள் செய்யவேண்டிய முறையையும் விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்த புஸ்தகம் ஒன்று எல்லாருக்கும் அவசியம் வேண்டுமென்றும் இது லோகத்திற்கு விசேஷ உபகாரமானகாரியமென்றும் எனது அபிப்பிராயம். வேண்டியவர்கள். க. நடேசசாஸ்திரிகள் 172 பெரியதெரு "திருவல்லிக்கேணி சென்னை" என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

பஞ்சாங்கம் வருஷாதிநூல் ஸங்கிரகம்.

லாலுகுடி ரிடைட்அஸிஸ்டெண்டு இஞ்சினீயர் ராவ்ஸாஹிப் பிர்மஸ்ரீ L.A. ரெங்கஸாமி அய்யரவர்களால் இயற்றப்பட்ட இப் பெயர்கொண்ட ஒரு புஸ்தகம் ஷை அய்யரவர்களால் அனுப்பப் பட்டதை வரப்பெற்றோம். தற்காலம் நம்குழவிகள் தங்கள்பால்ய வயது பூராவும் ஹூணபாஷையில் விசேஷப் பயிற்சியைப்பெற வேண்டி அதற்கு அர்ப்பணம் செய்துவிடுறபடியாலும், பிறகு கவனிக்க அவகாசம்கிட்டாதபடியாலும், நக்ஷத்ரம், திதி, ராகுகாலம், சூலம், யோகம், தியாச்சியம் முதலிய அவசியம் அறிந்துகொள்ள வேண்டியவைகளைக்கூட அறிந்துகொள்ளாமல் கஷ்டப்படுகிறார்களென்றும், இனி நம்சிறுவர்களுக்கும் இந்த கஷ்டம்ஏற்படக்கூடாதென்று கருதி இந்த விஷயங்களை மிகவும் எளிய தமிழ்நடையில் பாலர்கள் சுலபமாய் மனப்பாடம் செய்யவேண்டி, செய்யுளாக இயற்றியிருக்கிறார்கள். இதைக்கொண்டு சாமானியமாய் நடைபெறவேண்டிய சகல காரியங்களுக்கும் பிறரை யபேக்ஷிக்காமல் உசிதமான சமயங்களை நாமே அறிந்துகொள்ளலாம். ஸ்கூலில் படிக்கும் வித்யார்த்திகளுக்கு இது அதிகம் உபயோகப்படும். இதன் விலை 0—3—0.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.